உ



# திரு.சின்னத்துரை நாகலிங்கம்

**அவர்களின் சிவபதப்பேறு குறித்த**

# நினைவுமலர்

**16-05-2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் இனிய தெய்வத்திற்கு

## சமர்ப்பணம்





திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும்
நவாலியை வதிவிடமாகவும் கனடாவில்
வாழ்ந்து வந்தவருமாகிய
எங்கள் குடும்ப தெய்வமாகிய
**திரு. சின்னத்துரை நாகலிங்கம்**
அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிட்டார்.
தெய்வமாகி விட்ட எங்கள்
குடும்ப தெய்வத்தின்
திருப்பாத கமலங்களுக்கு
இம்மலரினை காணிக்கையாக
சமர்பிக்கின்றோம்.

**மகள், மருமகன்,**

**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவயம்



அன்னை மடியில் 1921.08.11

ஆண்டவன் அடியில் 2006.04.16

# அமரர் சின்னத்துரை நாகலிங்கம்

(Retired Assistant Commissioner of
Co-Op Development, Jaffana)
திருநெல்வேலி

## திதி வெண்பா

விய ஆண்டு சித்திரை பதினாறதினில்
பூண்டநற் சதுத்தித் தினத்தன்று அனுசநட்சத்திரத்தில்
- மறைந்த
திருநெல்வேலிப் பதியுதித்த நாகலிங்கமவர்
பார்போற்ற கரிமுகனடி சேர்ந்த நாளேயறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**தேவாரம்**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

நிரைகழல் அரவம் சிலம் பொலி யலம்பும்
நிமலர்நீ றணித் திருமேணி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரையெழு சுந்தும் காரற் பிளவும்
அளம் பருங் கனமணி வரன்றிக்
குரை கழல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே.

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி..

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவியன் நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்மன்னிய
தில்லைதன்னுள்
ஆழிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புகழ்

அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி இனிமையுமாகி அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி வருவாயே
இருநிலம்தில் எளியனும் வாழ எனதுமுனோடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்கனி கூரும் வடிவோனே
வளமுறை வேடனருளிய பூசை மகிழ் கதிர்கா முடையோனே
செககண சேகு தகுதிமிதோதி திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசைமேவும் பெருமாளே.

# கோளறு பதிகம்

பண் - பியந்தைக் காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மந்தமாலை புனல்சூடி வந்தென
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டொ யாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வகைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமேல ணிந்தே
துளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி சயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்க மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் மரமன்
நதியோடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ
துளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நனனோடு தூதர்
கொடு நோய்களான பரவும்
அதிகுண நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாடனோடு
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தே
துளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவரக்கு மிகவே.

வாள்வரி ளதளதாடை வரிகோவ ணத்தர்
மடவா டனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
துளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவாக்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தே
துளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகைான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்க மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவா டனோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
துளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தெ
துளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தல் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தெ
துளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ண
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள்
அரசாள் வராணை நமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுந் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
என்னிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினைனேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உள்ளவென் னுள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்யோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் பலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான த்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றேன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே அப்பன்
உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாச கம்என்னும் தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கந்த சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியிற் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
புல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செகண செகண
மொகமொக மொகமொக மொக மொக மொகென
நகநக நகநக நகந நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பதிருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியம் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பாதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணிந்த கையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

**செந்தில் மேய கந்த சஷ்டி கவசம் முற்றிற்று**

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சுவாமிகள் அருளிய
# நற்சிந்தனை

## சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே 1

அல்லற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே 2

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் சொல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டிம னத்தையாளச் சொல்லு சிவமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் நல்லைவாசன்

இராகம் - இந்தோளம் தாளம் - ஆதி

பல்லவி

எங்கள் குருநாதன் எழில்நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன்

அநுபல்லவி

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாறாத மௌன தியானப்ர வேசன் (எங்)

சரணங்கள்

அன்பர்ச காயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலும்நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலுமென்றன் மனத்தினில் தாண்டவன் (எங்)

வஞ்சம் பொற(ா)மைகோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்சக மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர் தம்போனெஞ்சிற் பண்புட னினிப்பவன் (எங்)

# நல்லூர் வீதியில்

இராகம் - பிலஹரி தாளம் - ரூபகம்

**பல்லவி**

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணங்கள்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே (எந்நாளும்) 1

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே (எந்நாளும்) 2

## யாக்கை நிலையாமை பற்றியவை

'நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்க்கும்
வாள்அது உணர்வார்ப் பெறின்'

'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு'

'குடம்பை தனித்து ஒழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

'புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு'

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"
- திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"இறைவன் மனிதருக்கு வழங்கியது கீதை"
"மனிதன் இறைவனுக்கு வழங்கியது திருவாசகம்"
"மனிதன் மனிதனுக்கு வழங்கியது திருக்குறள்"

# உயர்திரு சின்னத்துரை நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரர் திரு.நாகலிங்கம் சின்னத்துரை அவர்கள் ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தோரம் ஆண்டு எழில் வளம் கொஞ்சும் திருநெல்வேலிப் பதியினிலே பெரும் சீர்பெற்ற வம்சமதில் திரு.திருமதி.சின்னத்துரை நல்லம்மா அவர்களின் சற்புத்திரனாய் அவதரித்தார். இவர் இரு அன்புச் சகோதரிகளான புஷ்பகாந்தி, மகேஷ்வரி அவர்களுக்கு மிகவும் பாசமிகு தம்பியாக இருந்ததனால் எல்லோராலும் "தம்பி" என்று அன்பாக அழைக்கப்பட்டார்.

இளமைக் கல்வியை திருநெல்வேலி சைவத் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்று உயர்கல்வியை சென்பற்றிக்ஸ் கல்லூரியில் பயின்று பின்னர் தன் பல்கலைக்கழக வாழ்வை ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதாம் ஆண்டில் "சிலோன்" பல்கலைக்கழகத்தில் தொடங்கினார். தொடர்ந்து ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தி நாலாம் ஆண்டுவரை பயின்று அதை செவ்வனே நிறைவேற்றினார். தான் பெற்ற கல்வியை செவ்வனே சீருற பயன்படுத்த எண்ணிய அவர் கொழும்பு சென்ஜோசெப் கல்லூரியில் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தி நான்காம் ஆண்டு தொடக்கம் நாற்பத்தி ஆறாம் ஆண்டுவரை ஆசிரியராக கடமையாற்றி கல்லூரிக்கே பெருமை சேர்த்தார்.

ஊர் நலனிலும் உற்றார் உறவினர் நலனிலும் அன்புடனும் அக்கறையுடனும் நேர்மையாகவும் உழைத்த இவர் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தாறில் கூட்டுறவுச் சங்கத்தின் பரிசோதகராக இலங்கையின் பல பாகங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றினார். கடமையாற்றினார் என்று கூறுவதிலும் பார்க்க பெரும் சேவையாற்றினார் என்பதே மிகப் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் சென்ற ஊர்களெல்லாம் அவர் அந்தந்த ஊர் மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார்.

ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோனாக்கிய இவருடைய அன்னையார் தனது உறவில் மிகவும் குணவதியும் திரு.திருமதி.சுப்பிரமணியம், சரஸ்வதியின் மகளுமான நன்மலரை இவருடைய இல்லாளாக ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதில் மணமுடித்து கொடுத்தார். இவர்களும் வள்ளுவன் கண்ட இல்வாழ்க்கை யெய்தி அல்லவை கடிந்து இறைவனை வேண்டி நற்பெரும் சற்புத்திரியாம் லலிதாவை ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தொன்றில் பெற்றெடுத்தனர். பெற்றவர் இல்லையென்பவர்க்கு எல்லாம் தந்து உற்றம் சுற்றம் பெற்றவர் போன்ற அனைவர் மத்தியில் இன்முகத்தோடு இல்லறம் இயற்றி இனிதாய் வாழ்ந்தனர்.

இவர்களின் இல்வாழ்க்கையில் எவருடைய கண்ணூறும் பட்டு கெட்டுவிடக் கூடாதென எண்ணிய இறைவன் திருஷ்டிப் பொட்டாக நன்மலரை தன்பாதக் கமலத்தில் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தைந்தில் சேர்த்துக் கொண்டார். இவர் தன்னில் சரிபாதியான நன்மலரை இழந்த பின்பும் தன் வேதனையையோ இல்லை வேலைப் பழுவையோ கருத்தில் எடுக்காது தன்மகளுக்கு தாயும் தந்தையுமாக தன் இறுதி மூச்சுவரை இருந்து தாயின் குறையறியாது லலிதாவை வளர்த்து வழிகாட்டினார்.

உற்றதுணையை இழந்து நின்றாலும் தனக்கு உயிர்கொடுத்த அந்தத் தாயை தன் உயிரினும் மேலாக நினைத்தார். பெற்றதாய் பத்து மாதங்களே தன் வயிற்றில் சுமப்பாள். ஆனால் இவரோ தாயை, தான் குடியிருந்த கோவிலை, ஒரு பெண்பிள்ளை தன் தாயை எப்படி பிற்காலத்தில் வைத்து பராமரிப்பாரோ அதனிலும் மேலாக, நோயுற்று இருந்த அவரை நோயின் தாக்கமறியாமல் பாராமரித்த பெருமை இவருக்கே சாரும்.

தாயிற்கு ஒரு சற்புத்திரனாகவும் மகள் லலிதாவுக்கு ஒரு இனிய தாய் தந்தையாகவும், அமைந்த இவர் தன்வழிவந்த உடன் பிறந்தோருக்கும் மனையாட்டி வழிவந்தோருக்கும் வாரி வழங்கி உறுதுணை புரிந்து அவர்கள் பெற்ற பிள்ளைகளனைத்தும் தனதென நினைத்து தக்க வழிகாட்டி நானிலம் போற்ற நல்வகை செய்தார். அவ்வழியே தன்மகள் லலிதாவையும் இவ்வையத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியிருக்கும்படி செய்த பெரும் தந்தையாக அமைந்தது அவர் மகள் முற்பிறப்பில் செய்த புண்ணியமே.

இதற்கிடைப்பட்ட காலத்தில் இவருடைய உத்தியோகத்திலும் கூட்டுறவு அபிவிருத்திச் சங்க உதவி ஆணையாளராக உயர்வு பெற்றார். இப்பதவியில் இவர் ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தி எட்டாம் ஆண்டுவரை சேவை செய்து ஓய்வு பெற்றார். உத்தியோகத்தில் ஓய்வு பெற்றாலும் எறும்பு போன்ற சுறுசுறுப்பும் கற்பகதரு போன்ற குணமும் அவரை ஓய்வாக சாய்மனையில் சரிய விடவில்லை. பலருக்கும் பலவழிகளிலும் உதவி செய்யும் சுபாவம் அவரை அண்டியிருந்தோருக்கு பெரும் துணையாகவும் ஆறுதலாகவும் அமைந்தது. அவ்வேளையில் தன் மகள் மருமகன் பேரப்பிள்ளை என தன் குடும்ப உறவுடன் சேர்ந்து வாழ்வதற்கு ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு கனடாவிற்கு குடிபெயர்ந்தார்.

குடிபெயர்ந்தாலும் தானமும் தருமமும், சைவமும் தன்னுயிர்த் துணையென இன்முகத்தோடு எவரோடும் பழகி நன்முறை காட்டி அவர் தம் பேரக்குழந்தைகளிற்கும் தன் வழிகாட்டி பண்பில் சிறந்தவர்களால் பாரினில் மேன்மக்களாய் ஆக்கினார். 'அரிது அரிது இப்படிப்பட்ட மேன்மக்களைக் காண்பது அரிதினும் அரிது' சிறுகுழந்தைகள் முதல் முதியவர்கள் முதற்கொண்டு எல்லோரிடத்திலும் அன்பாக நடந்து எல்லோரிடத்தின் உள்ளத்திலும் கொள்ளை கொண்டு குடிபுகுந்தார். நாட்டு நலனில் மிகவும் அக்கறை கொண்டு .பெயரையும் புகழையும் விரும்பாமல் செய்த சேவை தனிச்சிறப்பு வாய்ந்தது.

எல்லோரிற்கும் புத்திமதிகளைக் கூறி உற்றார் உறவினர்களை அரவணைத்து நடந்த அவர் ஒருவரிற்கும் என்றுமே பாரமாக இருந்ததே கிடையாது. 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' எனும் கீதை வாக்கிற்கு இணங்க மானிடப்பிறப்பு என்னும் தன் கடமையை இனிதே முடித்த அமரர் திரு.நாகலிங்கம் அவர்கள் மனிதருள் மாணிக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் புலம்பல்

அன்னையாய்த் தந்தையாய் அன்புத் திருமகனாய்,
அணுவளவும் குறைவின்றி காலமெலாம் காத்தவரே!
தன்னை நிகர் புகழ்காக்க தரணியிலே எனைப் போற்ற,
பெருமையோடு நான் வாழ எந்நாளும் நினைத்தவரே!
மென்மையான உளம் கொண்டு மேத்தினியில்
எனைக்காத்துக்
துன்ப மெனக் கொன்றென்றால் புழுவாய்த் துடிப்பீரே!
தலங்கள் பல சென்றாலும் தவம் செய்து நின்றாலும்
எனைக் காத்த பெருமகனே எங்குற்றீர் ...............?
எப்பிறப்பில் இனி நான் காண்பேன் ...................?

## மருமகன் புலம்பல்

சுமைதாங்கியாயிருந்து எம்குடும்பம் தழைத்தோங்க,
அல்லும் பகலும் அயராது கண்விழித்துக் காத்தவரே!
நேர்மைக்கு தூயவரே! நெஞ்சத்தாற் பெரியவரே! -
பெரும் அடவியினில்
பகலவனாய் வந்துதித்து இருள் நீக்கிய உத்தமரே!
இறுதிவரையெமைக்காக்கும் கோமகனாய் -
நினைத்திருந்தேன்
பாதித்துணை யிழந்தேனே! பலமிழந்து போனேனே!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் -
இனி எனக்கு
மாமா என்றழைக்க யாருள்ளார் இவ்வையத்துள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

எமைப் போற்ற பெற்றோர் எமக்கிருந்தும் - ஓர்முறை
நீரெமை அணைப்பதற்கு நிகருண்டோ!
இமைப்பொழுதில் நாமிடறி விழு முன்னர்
துடித்து விடும் உம் உள்ளம் துயர் கொள்ளு முன்னரே!
பாலர் வகுப்புமுதல் பள்ளிவரை நீர்நடந்து
பட்டங்கள் பெற்ற பின்பும் பாதிவழி வருவீரே!
பள்ளி வயதினிலே செய்த குறும்பையெல்லாம் -
பக்குவமாய் எடுத்துரைத்து பாசத்தைப் பொழிந்தீரே!
பண்புகள் பல சொல்லி பார்போற்ற வைத்துவிட்டு
பாதி வழிவந்து விட்டு மீதி வழி எங்கு சென்றீர்!

We will always remember my father as a kind, honest, patient and religious person. My father dedicated his life to me from the age of four when I lost my mother. He was both a father and mother to me throughout my life. Although after my marriage we were apart for a few years, my father took an early retirement in order to join our family in 1979. From the time he arrived in 1979 until his death he was a cherished gift from God to our family. He found joy in our happiness and as such would always go out of his way to ensure we were well taken care of. We were very fortunate to be blessed by his presence since he not only raised me, but also helped to raise my two sons. My father pledged his life to helping and teaching others, he was often viewed as a father or grandfather to many.

Lalitha & Vijayanathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In loving memory of our grandfather, Sinnathurai Nagalingam, and the contribution he made to our lives. Grandpa will always be remembered for his kindness, thoughtfulness, and warmth. He contributed significantly to our development and always had our best interests in his heart. We were very fortunate to have him with us to share his life experiences and to show us a path of life filled with generosity and kindness. Although his physical presence will be missed he will live in our heartsand minds for the course of our lives.

Lovingly, Ram, Krishna, & Nirmala

## THE SOUL I KNEW AS NAWALI MACHAN

The inspired Self is not born nor does He die; He springs form nothing and becomes nothing. Unborn, permanent, unchanging, primordial, He is not destroyed when the body is destroyed.

**Yajur Veda.**

After eighty four years of service and sacrifice, the soul that took the name and form of Mr.Nagalingam had left this physical world on the Easter Sunday of 2006.

God has given the freedom to choose our path of action, by which we draw our destiny. Mr.Nagalingam led the life of a Karma Yogi. Not only did he sacrifice his life for his only child Lali, but he extended his love and affection to all, including Vijayan, Ram, Krishna and Nirmala.

Daily he would spend time to call many of his friends and relatives to advice on various matters. He was in touch with many of our relatives who continued to live in the war torn country of SRI LANKA by writing to them regularly, he gave hope and comfort to those forgotten souls.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr.Nagalingam became "Appah" to many of Lalies and Vijayan's friends, their children became his grand children! Always optimistic in life, through his presence and advice, he gave guidance to many. When he was working, holding a very high position in the Govt.., he moved equally well with people form all walks of life-always friendly, helpful and humble. I remember the Sinhalese servant boy called Banda. Mr.Nagalingam treated him as his own child he was a very happy and cheerful lad throughout his stay with Mr.Nagalingam and Lali.

During his last two months of preparation for departure from this world, Mr.Nagalingam's main concern was that he shouldn't cause any trouble or be a burden to others. In spite of the weakening body, he always thanked the nurses and the doctors for their care. Never raised a word of complaint; a gentle soul who led the life of a true Son of God. Always interested in others welfare and wanting to help but never attached to the fruits of his actions.

May his soul attain eternal bliss and rest in peace at the lotus feet of Bahawan Sathya Sai Baba. We thank God for sharing such a noble soul among us; Mr.Nagalingam will continue to guide and protect Lali, Vijayan, Ram, Nirmala and Krishna. The pain of grief takes time to heal, but through prayers and service, God will comfort Lali, Vijayan, Ram, Nirmala and Krishna, his friends and relatives and provide strength and courage to do our worldly duties till we all meet again in heaven.

OM, SAIRAM
OM, Shanti, Shanti, Shanti
Baba, Vimo, Danu & Dushi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mr. Sinnathurai Nagalingam**

August11, 1921 - April 16 .2006

Mr. Nagalingam was the youngest son of Mr.Nagaligam Sinnathurai and Mrs. Nallamma Sinnathurai. He passed away peacefully on April 16, 2006, after a brief illness. He leaves behind his beloved daughter Lalitha (Lali), his only child. When his wife Nanmalar died after only 5 years of marriage, he firmly rejected pressures from relatives to get married again and devoted the rest of his life to the upbringing of his only child, Lali, and her two sons Ram and Krishna. He doted on the boys, and they sorely miss his deep love and affection and good advice.

He looked after his widowed mother, Mrs. Nallamma, until she passed away in 1977.

Born in Thirunelvely, in Jaffna, Mr. Nagalingam started his early education at the Thirunelvely Saiva Vidyasalai. He moved on to Parameshwara College, also in Thirunelvely, and from there, he moved to St. Patrick's college, Jaffna, where he completed his Matriculation. He entered the University of Ceylon, in Colombo, Sri Lanka, where he studied from 1940 to 1943.

At the end of his university career, Mr. Nagalingam worked as a teacher at St, Joseph's College, Colombo, until 1946, and moved on to the Co-operative Department of the Government of Ceylon. He rose from the rank of Inspector of Co-operatives, to the position of Headquarters Auditor, and soon rose to the rank of Assistant Commissioner of Co-operative Development. Between 1969 and 1978, he was Assistant Commissioner in Kalmunai, and Trincomalee in the Eastern Province, and Jaffna and Vavuniya in the Northern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He retired from his rising career prematurely, in order to join his daughter Lali and her family in Canada. He stayed with them until the end of his long, virtuous and fruitful life. He lived a very religious life, kept close touch with his many friends and relatives, and no one who sought his help or advice was turned away.

Mr. Nagalingam died exactly as he lived, surrounded by devoted family and relatives and an admiring circle of friends. Every one whose life he came into benefited from just knowing him, and there is no one who knew him who does not miss his smiling and kindly countenance today. I mourn his passing away and I commend him to God's Grace.

A. Kathiramalainathan
Toronto
(Formerly of Thirunelvely)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
11-08-1921





மறைவு
16-04-2006



## அமரர். சின்னத்துரை நாகலிங்கம்

Retired Assistant Commissioner of Co-Op. Development, Jaffna



ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் சான்றோனாய் உதித்து
ஊரிற்கு ஏற்ற நல்ல நாகத்தின் ரத்தினமாக மிளிர்ந்து
பெற்றார்க்கும் உற்றார்க்கும் உறுதுணையாய் அமைந்து
வாழும் பொழுது காலம் பெரும் சீலனாய் வழிகாட்டியாய் அமைந்து
மறைந்தாலும் வாழ்வால் வாழ்ந்து நிற்கும் - உங்களிற்கு
திருநெல்வேலி மக்கள் ஒன்றியம் கனடாவின் கண்ணீர் அஞ்சலிகள்

அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்திற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.



தொடர்புகளுக்கு
குலம் 416 287-8416
பாலா 905 472-2977
நித்தி 905 472-9590
அருள் 905 472-5280
விபுல் 416 496-8788

திருநெல்வேலி
மக்கள் ஒன்றியம் - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **ஒன்று:** | **இறைவன் ஒன்று** | |
| **இரண்டு:** | **அறம்** | - இல்லறம், துறவறம் |
| | **இருவினை** | - நல்வினை, தீவினை |
| | **இருமை** | - இம்மை, மறுமை |
| **மூன்று:** | **முப்பொருள்** | - பதி, பசு, பாசம் |
| | **மும்மலம்** | - ஆணவம், கன்மம், மாயை |
| | **மும்மூர்த்திகள்** | - பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் |
| **நான்கு:** | **நால்வேதம்** | - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் |
| | **சைநாற்பதங்கள்** | - சரியை, கிரியை, சாமம், அதர்வணம் |
| | **நாலு யுகங்கள்** | - கிருதயுகம், திரேதாயுகம், துவாபாரயுகம், கலியுகம் |
| **ஐந்து:** | **ஐந்தெழுத்து** | - நமசிவாய |
| | **பஞ்சலோகம்** | - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் |
| | **ஐம்பொறி** | - மெய், வாய், கண், மூக்கு, செவி |
| | **ஐம்புலன்** | - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை |
| | **பஞ்சாமிர்தம்** | - வாழைப்பழம், மாம்பழம், பாலப்பாழம், மாதுளம்பழம், விளாம்பழம் |
| **ஆறு:** | **ஆறெழுத்து** | - சரவணபவ |
| | **ஆறாதாரங்கள்** | - மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், வசுத்தி, ஆஜ்ஞை |
| | **வேதாங்கள்** | - சிட்டை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் |
| **ஏழு:** | **ஏழு பிறப்புக்கள்** | - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் |
| | **சப்த நதிகள்** | - கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவேரி |
| | **சப்த சமுத்திரம்** | - உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் |
| **எட்டு:** | **அஷ்ட ஐஸ்வர்யம்** | - அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை |
| | **அஷ்ட மங்கலங்கள்** | - சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தொட்டி முரசு, விளக்கு, கொடி, இணையக்கயல் |
| **ஒன்பது:** | **நவக்கிரங்கள்** | - சூரியன், சந்திரன், கேது, செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது |
| | **நவதானியம்** | - கோதுமை, பச்சரிசி, துவரை, பச்சைப்பயறு, கடலை, மொச்சை, எள்ளு, உழுந்து, கொள்ளு |
| | **நவலோகம்** | - பொன், இரும்பு, தாமிரம், ஈயம், பதுகம், இரதி, நாகம், வெள்ளி, வெண்கலம் |
| | **ஒன்பது வாயில்** | - கண்கள், காதுகள், மூக்குத்துளைகள், வாய், குதம், குய்யம் |
| **பத்து:** | **தசாயுதங்கள்** | - வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், த்வஜம், கதை, திரிசூலம், மத்மம், சக்ரம் |
| | **தசவாயுக்கள்** | - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், வேததத்தன், தனஞ்ஜயன் |
| | **தசாவதாரம்** | - மத்ஸ்கம் (மீன்) கூர்மம் (ஆமை) வாரகம் (பன்றி). நரசிம்மர், வாமனர், பரசுராமர், ஸ்ரீராமர், பலராமம், கல்கி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**எமது அன்புத் தெய்வம்**

**உயர்திரு. சின்னத்துரை நாகலிங்கம்**

அவர்களின் மரணக்கிரியையிலும்
அந்தியேட்டி சபீண்டீகரண
கிரியையிலும் சமூகம் தந்து
பலவகையான உதவிகளைச் செய்தும்
நேரில் வந்தும் தொலைபேசி மூலமும்
அனுதாபச் செய்திகள் தெரிவித்தும்,
மடல்கள் அனுப்பியும், ஆறுதல்
வார்த்தைகள் அளித்தும் எங்கள் துக்கத்தில்
பங்கு கொண்டு பிரார்த்தனை செய்தவர்களுக்கும்
இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும்,
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் மற்றும் யாவர்க்கும்
எமது உளமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.




**இங்ஙனம்**

**மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.



**இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாரம்சமுமாகும்**
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org